பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 03 வெள்ளிக்கிழமை 17.01.2020 கதிர் 73

இனி அது இரகசியம் அல்ல!

தனித்து சிங்கள, பௌத்த வாக்குகளை மட்டும் நம்பி அரசியல் செய்வது – குறிப்பாகத் தேர்தல் அரசியல் செய்வது – என்பதில் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு குறியாக இருக்கின்றது என்பது வெளிப்படையானது. பக்கம் 02

# தலைமைத்துவ இழுபறி ஐ.தே.கவில் உச்சத்தில்!

## நேற்றைய கூட்டமும் முரண்பாட்டில் முடிவு



கொழும்பு, ஜனவரி 17

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாஸவை தெரிவு செய்யக் கட்சியின் நாடாளுமன்றக் குழு முன்வைத்த ஏகோபித்த கருத்துக்கள் நேற்றும் தோல்வியில் முடிந்துள்ளன. இது தொடர்பாக சிறிக்கொத்தாவில் நேற்று நடந்த கூட்டத்தைத் திடீரென ஒத்திவைத்து விட்டு அங்கிருந்து வெளியேறினார் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. இதனால் ஐ.தே. கவின் தலைமைத்துவ இழுபறி மேலும் உச்சமடைந்துள்ளது. பக்கம் 03

## கைக்குண்டுடன் ஒருவர் கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி, ஜன. 17

கிளிநொச்சியில் கைக்குண்டு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார். கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் வைத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடம் தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## தெல்லிப்பளையில் பெண் பொலிஸ் வீட்டில் மறைந்திருந்த கொள்ளையர் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 17

தெல்லிப்பளையில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டுக்குள் மறைந்திருந்த கொள்ளைச் சந்தேகநபர்கள் இருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மானிப்பாய், கோப்பாய் மற்றும் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் கொள்ளையிட்ட நகைகளை வவுனியாவில் விற்பனை செய்துள்ளமையை அறிந்து மானிப்பாய் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் அவர்கள் இருவரும் தெல்லிப்பளையில் உள்ள தமிழ்ப் பெண் உத்தியோகத்தரின் பக்கம் 03

## சிறைச்சாலையில் ரஞ்சனை பார்வையிட்டனர் எம்.பிக்கள்

கொழும்பு, ஜன. 17

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றஉறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை பார்வை யிட ஐ.தே.கவின் எம்.பி.க்கள் சிலர் நேற்று சிறைச்சாலைக்குச் சென்றிருந்தனர். பக்கம் 03

## பகிடிவதையால் இடைவிலகிய மாணவர் மீளவும் பல்கலைக்கு

கொழும்பு, ஜன. 17

பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்று முதுநிலை மாணவர்களின் பகிடிவதை துன்புறுத்தல்களால் பாதிக்கப்பட்டு இடை விலகிய மாணவர்களை மீளவும் அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். பக்கம் 03

## இளைஞர்கள் - படையினர் நாகர்கோவிலில் மோதல்!

வடமராட்சி கிழக்கு-நாகர்கோவில் பகுதியில் இராணுவத்தினருக்கும் இளைஞர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலை அடுத்து, 4 இளைஞர்களை இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர். இதை யடுத்து அந்தப்பகுதியை இராணுவத்தினர் வளைத்துள்ளதால் பதற்ற நிலை காணப்படுகிறது.

நேற்று முன்தினம் நள்ளிரவு அந்தப் பகுதியில் இராணுவவாகனத்துக்கு வழி விடவில்லை எனக் பக்கம் 03

## கோட்டாபய-மஹிந்த பனிப்போர் ஆரம்பமாம்

கூறுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஜன. 17

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் பனிப்போர் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

இதனால், ஜனாதிபதி தனது வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் பக்கம் 03

## புதிய இந்தியத் தூதுவராக விரைவில் கோபால் பாக்லே



கொழும்பு, ஜன. 17

இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவராக சிரேஷ்ட இராஜதந்திரி கோபால் பாக்லே விரைவில் வியேற்கவுள்ளாரெனத் தெரியவருகிறது. பக்கம் 03

## கட்டுநாயக்காவுக்கு கோட்டா நேற்று மாலை திடீர்ப் பயணம்



கொழும்பு, ஜன. 17

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு நேற்று மாலை திடீர்விஜயம் ஒன்றை மேற் பக்கம் 03

## ரஞ்சன் எம்.பியுடன் உரையாடல்; நீதிவான் தம்மிக்க பதவி நீக்கம்!

மேல் நீதிமன்ற நீதிபதி ஜிஹான் பிலப்பிட்டிய குறித்து நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை

கொழும்பு, ஜன. 17

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி ஜிஹான் பிலப்பிட்டிய தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கான பரிந்துரையை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது நீதிச் சேவைகள் ஆணைக்குழு.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்ட நீதிவான் தம்மிக்க ஹேமபாலவை சேவையிலிருந்து இடைநீக்கம் செய்து நீதிச் சேவைகள் ஆணைக்குழு பணித்துள்ளது. பக்கம் 03

## கொட்டடியில் வாள்வெட்டு; மூவருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாணம், கொட்டடியில் இருவர் மீது வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்ற ஆறு பேரில் மூன்று பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூவரும் நீதிமன்றின் உத்தரவில் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் கொட்டடி வைரவர் கோவிலடியில் நின்ற இருவர் மீது பக்கம் 03

காலைக்கதிர்
Kalaikathir



# யாழில் கோமாதா வழிபாடு



கோமாதா பொங்கல் வழிபாடும் பேரணியும் யாழ் நகரில் நேற்று மாலை இடம்பெற்றன.

யாழ் வர்த்தகர்களின் ஏற்பாட்டில் நகரிலுள்ள ஆலயத்தில் கோமாதாக்களுக்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்று நகரில்ஊர்வலமும்இடம்பெற்றது.

இதன் போது வீதி வழியாக அழைத்து வரப்பட்ட கோமாதாக்களுக்கு வர்த்தகர்கள் வழிபாடு செய்தனர்.

இந் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்

மேலும் வர்த்தகர்கள், மத்த் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# பஸ்களை கண்காணிக்கும் பணி விரைவில் ஆரம்பம்

கொழும்பு, ஜன.17

அதிக ஒலியுடன் பாடல்களை ஒலிக்கச் செய்யும் பயணிகள் போக்குவரத்து பஸ்கள் குறித்து கண்டுபிடிக்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சகல பஸ்களையும் பரிசீலிக்க தேசியப்போக்குவரத்து ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு அதிக ஒலி எழுப்பும் வகையில் பாடல்களை ஒலிக்கச் செய்யும் பஸ்கள் குறித்து முறையிடுவதற்கு 1955 என்ற அவசர இலக்கம் ஒன்றும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் தனியார் பஸ்களில் சத்தமாக இசை மற்றும் காணொளிகளை ஒலி, ஒளி பரப்பும் நடத்துநர்களுக்கு எதிராக முறையிட முடியுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்தோடு, அனைத்து பஸ்களிலும் ஒலிப்பரப்புவதற்கு ஏற்ற வகையில் ஆயிரம் பாடல்கள் அடங்கிய தொகுப்பை போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு அறிமுகம் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரோஹண விஜயவீரவின் மனைவி தாக்கல் செய்த மனு நிராகரிப்பு!

காணாமல் போனார் எனக் கூறப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் ரோகண விஜயவீரவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான உத்தரவு ஒன்றை அரசு விடுக்க வேண்டும் எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படாமல் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ரோஹண விஜயவீரவின் மனைவி சித்ராங்கனீ விஜயவீரவினால் இந்த மேல்முறையீட்டு மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனு நேற்று நீதியரசர் குழாமினால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதியரசர்களான சிசிர டி.ஆப்ரு, எஸ்.துரைராசா, காமினி அமரசேகர ஆகியோர் நீதியரசர் குழாமில் இடம் பெற்றிருந்தனர்.

மனுதாரரான சித்ராங்கனீ விஜயவீரவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, காணமால் போயுள்ள தனது கணவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு ஆரம்பத்தில் மேல் முறையீட்டு நீதி மன்றத்தில் ஆள்கொணவு மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார் எனக் குறிப்பிட்டார்.

29 வருடங்களுக்குப் பின்னர் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்து அதனை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாதென நிராகரிக்கப்பட்டதாக சட்டத்தரணி நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவை வலுவிழக்கச் செய்யுமாறும் கோரியும், இந்த மனுவை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிடுமாறு கோரியும் சித்ராங்கனீ விஜயவீர உயர் நீதிமன்றத்தில் இந்த மனுவைத் தாக்கல் செய்திருப்பதாகச் சட்டத்தரணி குறிப்பிட்டார். இவ்வாறான ஆள்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்வதற்கு குறிப்பிட்ட கால எல்லை இல்லைஎன்றும்அவர் கூறினார்.

தமது மனுதாரருக்கு இருந்த அச்சம் மற்றும் உயிர் அச்சுறுத்தல் காரணமாக இவ்வாறான மனு ஒன்றை உரிய காலத்தில் சமர்ப்பிப்பதற்கு முடியாமல் போனதாகவும் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

சட்டத்தரணி முன்வைத்த விடயங்களை விரிவாக ஆராய்ந்த பின்னர் 3 நீதியரசர்களைக் கொண்ட நீதிபதிகள் குழாம் இந்த மனுவை விசாரிப்பதற்கு போதுமான சட்ட அடிப்படை இல்லை என்பதால் அதனை நிராகரிக்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன, ஜெனரல் ஹெமில்டன் வனசிங்க, ஜெனரல் சிசில் வைத்தியரட்ண ஆகியோரும் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

# 11 இளைஞர் கடந்தல் சந்தேகநபரான கடற்படை அதிகாரிக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஜன. 17

இலங்கை கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கொமடோர் டி.கே.பி.தசநாயக்க ரியல் அட்மிரலாக பதவி உயர்த்தப் பட்டுள்ளார்.

2008-2009ஆம் ஆண்டு காலப்பகுதியில், கொழும்பில் 11தமிழ் இளைஞர்களைக் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில், கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்க மீது குற்றச் சாட்டுக்கள் உள்ளன.

அத்துடன், அவர் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பு மேல்நீதிமன்றால் ஒரு இலட்சம் ரூபா



காசுப் பிணையிலும், தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று பேரின் பிணை உத்தரவாதத்தின் கீழும் பிணையில் செல்ல அனுமதிப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கொமடோர் டி.கே.பி.தசநாயக்க ரியல் அட்மிரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுபான்மையினரை – குறிப்பாகத் தமிழரையும் முஸ்லிம்களையும் – வெறுப்பது போல பெரும்பான்மையினருக்குக் காட்டுவதும் கூட, இந்த அரசியல் தந்திரோபாயத்தின் ஓர் அங்கம் போலும்.

கோட்டாபய ராஜபக்ஷவைச் சூழவிருக்கும் பேரினவாத ஊது குழல்கள் அவ்வப்போது வெளியிடும் கருத்துக்கள் இதனை நமக்கு உறுதிப்படுத்தி நிற்கின்றன. "தமிழர் கேட்கும் எந்தத் தீர்வையும் தரவே மாட்டோம்" – என்று அந்தத் தரப்பில் இருந்து வரும் அறிவிப்புகள் இந்த வகையறாவைச் சேர்ந்தவைதான்.

இவ்வளவு காலமும் ஜனாதிபதி அலுவலகத்தினால் – அல்லது பிரதமர் அலுவலகத்தினால் – நடத்தப்பட்டு வந்த தேசியத் தைப்பொங்கல் நிகழ்வு ரத்துச் செய்யப்பட்மையும் கூட – அதற்கு வேறு என்ன காரணங்கள் கூறப்பட்டாலும் சரி – இத்தகைய சிறுபான்மையை வெறுக்கும் பண்பியல்பை பெரும்பான்மையினருக்கு எடுத்துக் காட்டும் ஒரு போக்கின் பிரதிபலிப்பாகவே நாம் அடையாளம் காணமுடியும்.

அலரிமாளிகையில் தாம் முன்னர் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் இருந்த போது தேசியத் தைப்பொங்கலைத் தவறாது முன்னெடுத்து வந்த மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தமது சகோதரரின் – தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் – அரசு தேசியத் தைப்பொங்கல் நிகழ்வை ரத்தச் செய்தமை மனதை நெருடியிருக்கும் போல.

அந்த மன நெருடலை – குறையை – நிவர்த்தி செய்யுமாற் போல கடந்த தைப்பொங்கல் தினத்துக்கு முதல் நாள் நிகழ்வு ஒன்றைத் தமது அலரி மாளிகையில் சற்று மாற்றியமைத்து நடத்தினார் அவர்.

தைப்பொங்கல் தினத்துக்கு முதல்நாள் தமிழ்ப் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களின் ஆசிரியர்களை காலை விருந்துக்கு அழைத்தார் பிரதமர் மஹிந்தர்.

அவரது அலரிமாளிகை இல்லம் பொங்கல் மரபுப்படி கோலமிட்டு, நிறைகுடம், பூக்கள் எல்லாம் வைத்து சற்றுத் தமிழ் மணம் கமழ இருந்தது. நிகழ்வில் அடுப்பு மூட்டி, பானை வைத்துப் பொங்கவில்லையே தவிர, காலை விருந்தில் பிரதான உணவு சர்க்கரைப் பொங்கல் தான்.

ஒருபுறம் தம்பியின் – ஜனாதிபதி கோட்டாபயவின் – தீர்மானப்படி தைப்பொங்கல் நிகழ்வு இல்லை. மறுபுறம் தமிழ் ஊடக அன்பர்களுடன் தைப்பொங்கல் கொண்டாடியமை போன்று சக்கரைப் பொங்கலுடன் ஒரு சந்திப்பு. நல்ல திட்டம்தான் பாருங்கள்.

இந்தப் பத்திரிகை ஆசிரியர்கள் சந்திப்பை அவர்கள் மீதான ஒரு குறை கூறலுடன்தான் ஆரம்பித்தார் பிரதமர்.

*"எல்போதுமே அரசுக்கு எதிரானசெய்திகளைத்தான்–அரசையும் தமிழ் மக்களையும் பிரித்து வைக்கும் செய்திகளைத்தான் –தமிழ் பத்திரிகையாளர்களாகிய நீங்கள் பிரசுரிக்கின்றீர்கள்."* – என்ற செல்லக் கோபத்துடன் கடித்து கொண்டார் பிரதமர்.

*"தீர்வு இங்குதான் நாட்டுக்குள் நாம் தான் காணவேண்டும். வேறெங்கும் – வெளியில் – தீர்வுக்கு இடமில்லை. இந்தியாவில் போய் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடுவதில் அர்த்தமில்லை."* – என்று பிரதமர் மஹிந்தர் சற்று உரத்த தொனியில் கூறியபோது, அவர் அப்படி கூறியமையின் காரணம் எனக்கு சற்றுப் புரிந்தது. அதை வாசகர்களுடன் பகிருவது சரியானதுதானே...!

பிரதமரின் அந்தக் காலை விருந்து சந்திப்புக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த போதுதான் ஒரு செய்தி வட்டாரம் அந்தத் தகவலை எனக்குக் கூறியிருந்தது.

*"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட செய்தியுடன் இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதாக்கட்சியின்தேசியபொதுச் செயலாளர் ராம் யாதவ் சத்தம் சந்தடியின்றி இரண்டு நாள்களுக்கு முன்னர்தான் கொழும்பு வந்து திரும்பியிருக்கின்றார். அவர் கொழும்பில் சில மணி நேரமே தரித்து நின்றார். வந்தார். பிரதமரையும் ஜனாதிபதியையும் சந்தித்தார். புதுடில்லி திரும்பினார்."* – என்பதுதான் அந்தத் தகவல்.

அலரிமாளிகையில் காலை விருந்தின் இடையே இந்தத் தகவலை யாரிடமாவது உறுதிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் சென்றேன்.

சந்திப்பின் ஆரம்பத்திலேயே *"இந்தியாவுக்குப் போய் ஏன் அங்கு தீர்வைத் தேடுகின்றீர்கள்? இங்குதான் தீர்வு. நாம் தான் தீர்வைக் காணவேண்டும்."* – என்று பிரதமர் வெளிப்படுத்தியமை, இந்திய 'அரசியல் சுரண்டலினால்' அவருக்கு ஏற்பட்ட எரிச்சலின் விளைவு என்பதைப் புரிந்து கொண்டேன்.

காலை விருந்தின் போது சில நிமிடங்கள் அவருடன் தனியாகப் பேச வாய்ப்புக் கிட்டியது. 'இந்தியப் பிரதமரின் விசேட செய்தியுடன் பா.ஜ.கவின் தேசியப்பொதுச்செயலாளர்கொழும்பு வந்தாராமே, என்ன விடயம்?' – என்று நேரிடையாககக் கேட்டு விடலாமே என்று வாய் உந்தியது. ஆனாலும் கேட்காமல் விட்டு விட்டேன். இரகசியமான விடயத்தை ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும் என்ற இராஜதந்திரம் கருதி அவர் மறுத்தவிட்டால் பிறகு அந்தக் செய்தியைப் பிரசுரிக்க முடியாமல் போய் விடும் என்று நினைத்தேன். அதனால் கேட்காமலேயே விட்டு விட்டேன்.

நிகழ்வு முடிந்து வெளியே வரும் போது மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவருடன் அளவலாவினேன். தேசியப் பொங்கல் நடத்தாமல் நிறுத்தப்பட்டமை தொடர்பில் எனது அதிருப்தியை அவருக்குக் குறிப்பிட்டேன். அவர் அப்படி அது நிறுத்தப்பட்டமைக்கு பிறிதொரு காரணம் சொன்னார்.

*"இத்தகைய தைப்பொங்கல், தீபாவளி நிகழ்வுகளில் தமிழ் எம்.பிக்கள் கலந்து கொள்வதுதான் முக்கியமானது. இன்றைய நிலையில் ஜனாதிபதியின் இல்லத்திலோ, அலரிமாளிகையிலோ தேசியத் தைப்பொங்கல் நிகழ்வு நடத்தப்பட்டால் ஆக டக்ளஸ் தேவானந்தாவையும், ஆறுமுகம் தொண்டமானையும் தவிர வேறு தமிழ், முஸ்லிம் எம்.பிக்கள் வரமாட்டார்கள். அது அவமானமாய்ப்போய் விடும் என்று கருதி, அந்த நிலையைத் தவிர்ப்பதற்காகவே தேசியத் தைப்பொங்கலை நடத்தாமலேயே ரத்துச் செய்தார்களோ...!"* –என்ற ஒரு சந்தேகத்தை எழுப்பினார் அவர்.

அப்படியும் இருக்கலாம். யாருக்குத் தெரியும்? நாம் கவனிக்காமல் விட்ட இன்னொரு விடயத்தையும் அவர் சொன்னார்.

வழமையாக நடாளுமன்றத்தில் நடக்கும் முக்கிய தமிழ், இந்து நிகழ்வு நவராத்திரி பூஜை.

"சபாநாயகர் லொக்குபண்டார, சபாநாயகர் கரு ஜயசூரிய போன்றோர் நாடாளுமன்றத்தில் இந்த சரஸ்வதி பூஜை நிகழ்வை முழு இந்து பக்தி கமழ நடத்துவார்கள். இந்து சமயம் மீது பற்றுக் கொண்டவர்கள் அவர்கள். ஆனால் 2019 இறுதியில் – இம்முறை –நாடாளுமன்றத்தில் நவராத்திரி நிகழ்வே நடக்கவில்லையே. தேசிய தைப்பொங்கல் நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டமை குறித்து குறை கூறும்நீங்கள் நவராத்திரி நிகழ்வு காணாமல் போனமை குறித்து அலட்டிக்கொள்ளாதமைஏன்...? –நியாயமானகேள்வி. என்னிடம் பதில் கூற விளக்கம் எதுவும் இல்லை என் பதுதான் நிஜம்.

–மின்னல்–

# புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்ய விண்ணப்பம்

கொழும்பு, ஜன. 17

2020ஆம் ஆண்டுக்குரிய புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோருவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதற்கான பத்திரிகை அறிவிப்பை இன்று தேசிய பத்திரிகைகளில் வெளியிடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு 58ஆம் இலக்க நாடாளுமன்ற தேர்தல் திருத்தச் சட்டம் மற்றும் 1981ஆம் முதலாம் இலக்க நாடாளுமன்ற தேர்தல் சட்டத்துக்கு அமைய இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என அவர் மேலும் கூறினார்.

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தயாரிப்புப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு சுமார் ஒரு கோடியே 62 லட்சம் பேர் தகுதி பெற்றுள்ளனரெனத் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் குறிப்பிட்டார்.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடியே 50 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர் எனவும் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவின் மூலம் சுமார் மூன்று லட்சம் புதிய வாக்காளர்கள் பதியப் பெற்றுள்ளனர் எனவும் அவர் கூறினார். (ஐ)

# அரசியல் தேவைகளுக்காக ரஞ்சனின் குரல் பதிவுகள்

## ஹேசா விதானகே குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 17

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவுகளை அரசு தனது அரசியல் தேவைக்காக பயன்படுத்துவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை நேற்றுச் சிறைச்சாலையில் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்களின் எதிர்பார்ப்பு இன்று திசை திருப்பப்பட்டுள்ளது.

மேலும் தற்போதைய அரசின் நோக்கம் எதனை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது என்பதையும் மக்கள் தற்போது நன்கு உணர்ந்திருப்பார்கள்.

கடந்த அரசில் வெறுக்கப்பட்ட பலவிடயங்களை இன்று ஆளும் தரப்பினர் விரும்புகின்றார்கள்.

இதேவேளை உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவுகளை தங்களது அரசியல் தேவைக்காக அரசாங்கம் பயன்படுத்துகிறது– என்றார். (ஐ)

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த மாற்றத்தை எதிர்பார்த்து கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தெரிவு செய்த மக்களின் எதிர்பார்ப்பு சிதைந்து போயுள்ளது. அரச நிறுவனங்களுக்கு பிரதானிகளை நியமிக்க ஜனாதிபதி அமைத்த நிபுணத்துவக் குழுவைப் புறந்தள்ளிவிட்டு குடும்ப உறவினர்கள் மற்றும் நண்பர்களை அரச நிறுவனங்களின் பதவிகளுக்கு நியமித்து வருகின்றனர்.

ஜனாதிபதி நியமித்துள்ள குழுவை ஒரு பக்கம் தூக்கி வீசிவிட்டு, நாமல் ராஜபக்ஷவின் மாமனார் மற்றும் ரோஹித்த ராஜபக்ஷவின் மாமியார் ஆகியோரை ஸ்ரீலங்கன் விமான சேவையின் பணிப்பாளர்களாக நியமித்துள்ளனர்–என்றார். (ஐ)

# நுவரெலியா சீதையம்மன் ஆலயம் புனரமைப்புக்கு இந்தியா நிதியுதவி

நுவரெலியா சீதையம்மன் ஆலயப் புனரமைப்புப் பணிகளுக்கு இந்திய மத்திய பிரதேச மாநில அரசு 5 கோடி ரூபாவை (இந்திய ரூபா) ஒதுக்கத் தீர்மானித்துள்ளதாக அந்த மாநில கலாசார அலுவல்கள் அமைச்சர் பி.சி.சர்மா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கை வந்த அவர் இலங்கை அரசின் முக்கிய தலைவர்களைச் சந்தித்து இதுபற்றி பேச்சு நடத்தியுள்ளார்.

நாங்கள் சீதா கோயில் பற்றி கேள்விப்பட்டிருந்தோம், ஆனால் அங்கு எதுவும் செய்யப்படவில்லை. இப்போது நாங்கள் 5 கோடி ரூபாவை பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளோம், மேலும் இலங்கையில் உள்நாட்டில் பணத்தை திரட்டவும் முடிவு செய்துள்ளோம் என்றும் அமைச்சர் சர்மா இந்திய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

## கட்டுநாயக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார்.

இதன்போது அவர், சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள், வசதிகள் மற்றும் பயணிகள் சேவை குறித்து பரிசீலித்தார்.

மேலும் விமான நிலைய அதிகாரிகள் மற்றும் பயணிகளுடன் ஜனாதிபதி இதன்போது கலந்துரையாடினார்.

அத்துடன் விமான நிலையத்தை அவர் சுற்றிப் பார்வையிட்டு அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் குறித்து அதிகாரிகளுக்கு உரிய பணிப்புரைகளை வழங்கினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பல இடங்களுக்கு திடீர் விஜயங்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிறைச்சாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ, பாலித தேவரபெரும ஆகியோரும் இதில் அடங்குவர் எனச் சிறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில், ரஞ்சன் ராமநாயக்க நேற்றுக் காலை சிறை மருத்துவரினால் பரிசோதிக்கப்பட்டார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லி பிரதமர் அலுவலகத்தின் இணைச் செயலாளராக தற்போது பணியாற்றும் கோபால் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இந்திய வெளிநாட்டுச் சேவையில் 1992ஆம் ஆண்டு இணைந்த கோபால் முக்கிய பொறுப்புகளை வகித்த ஒருவராவார்.

தற்போது இலங்கையில் கடமையாற்றும் இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவராகச் செல்லவுள்ளார். (ஐ)

## தெல்லிப்பளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

வீட்டில் மறைந்திருக்கின்றனர் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

அதனடிப்படையில் அந்த வீடு நேற்று நண்பகல் முற்றுகையிடப்பட்டுச் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

வீட்டில் அவர்களை மறைத்து வைத்திருந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடந்த இரு மாதங்களுக்கு மேலாக கடமைக்குச் சமுகமளிக்கவில்லை. அதனால் அவர் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்கள் இருவரும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (ஐ-07)

## இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறி இளைஞர்கள் சிலருடன் இராணுவத்தினர் முரண்பட்டுள்ளனர். இதனையடுத்து இரு தரப்புக்குள்ளும் மோதல் இடம்பெற்றுள்ளது.

இந்த மோதலில் இரு தரப்பிலும் சிலர் காயமடைந்தனர் எனக் கூறப்படும் நிலையில், உடனடியாகச் சம்பவ இடத்தில் இராணுவம் குவிக்கப்பட்டு 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட இளைஞர்கள் உடனடியாகப் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் அந்தப் பகுதியை இராணுவம் முற்றுகையிட்டு தொடர் சோதனை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது. இதனால் பொதுமக்கள் – இராணுவம் இடையில் முறுகல் நிலை காணப்படுவதாகவும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு நேற்றுக் காலை சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ரஞ்சன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டனர் என்று ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி பத்மினி என். ரணவக்க, மேல் நீதிமன்ற நீதிபதி ஜிஹான் பிலப்பிட்டிய மற்றும் பத்தேகம நீதிமன்ற நீதிவான் தம்மிக்க ஹேமபாலா ஆகியோர் குற்றஞ்சாட்டப்பட்டது.

அவர்களது உரையாடல் ஒலிப்பதிவு இறுவெட்டுக்களை நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினருக்கான இல்லத்திலிருந்து பொலிஸார் மீட்டிருந்தனர்.

இந்த நிலையில் அந்த இறுவெட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸார், நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை கைது செய்தனர்.

நீதித் துறை மீது தேவையற்ற வகையில் தலையீடு செய்தார் என்ற குற்றச்சாட்டில் சட்ட மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டு நுகேகொட நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் அனுமதியளித்தார்.

அத்துடன், ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி பத்மினி என்.ரணவக்க, மேல் நீதிமன்ற நீதிபதி ஜிஹான் பிலப்பிட்டிய மற்றும் பத்தேகம நீதிமன்ற நீதிவான் தம்மிக்க ஹேமபாலா ஆகியோரின் வாக்குமூலம் பெற்றுக் கொள்ள சட்ட மா அதிபர், கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸாருக்கு நேற்று பணிப்புரை வழங்கினார்.

இந்த நிலையில் நீதிபதிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய பிரதம நீதியரசர் சந்திரசிறி ஜயந்த ஜயசூரிய தலைமையிலான நீதிச் சேவை ஆணைக்குழு நேற்று கூடியது.

அதன்போது, மேல் நீதிமன்ற நீதிபதி பத்மினி என்.ரணவக்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளமையால் அவர் தொடர்பான நடவடிக்கையை சட்ட மா அதிபர் முன்னெடுப்பார் என்று தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மேல் நீதிமன்ற நீதிபதி ஜிஹான் பிலப்பிட்டிய தொடர்பில் நியமன அதிகாரியான ஜனாதிபதியே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவரது சேவை தொடர்பான பரிந்துரையை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்க நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானித்தது.

அத்துடன், குற்றச்சாட்டுக்குள்ளாகியுள்ள பத்தேகம நீதிமன்ற நீதிவான் தம்மிக்க ஹேமபாலாவை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் சேவையில் இருந்து இடைநீக்கம் செய்ய நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு ஆணைக்குழு பணிப்புரை வழங்கியது. (ஐ)

## தலைமைத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைமைத்துவ மாற்றம் குறித்து தீர்மானம் எடுக்க ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று மாலை தொடக்கம் சுமார் 4 மணி நேரம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டம் எந்த இறுதித் தீர்மானமும் இன்றி நிறைவு பெற்றதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

எனினும் கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாஸவை தெரிவு செய்வது தொடர்பில் கூட்டத்தில் ஏகோபித்த கருத்து வெளியிடப்பட்ட நிலையில் கூட்டத்தைத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க திடீரென ஒத்திவைத்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கூறினார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரிய மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் அடுத்த வாரம் கூடி எடுப்பார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார். (ஐ)

## கொட்டடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் இரவு வாள் வெட்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆறு பேர் அடங்கிய கும்பல் ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தியது. தாக்குதல் நடத்திய கும்பலை கொட்டடி இளைஞர்கள் துரத்திச் சென்றபோது, கும்பல் 3 மோட்டார் சைக்கிள்களையும் கைவிட்டுத் தப்பிச் சென்றது.

வன்முறைக் கும்பல் கைவிட்டுச் சென்ற 3 மோட்டார் சைக்கிள்களும் கொட்டடியைச் சேர்ந்தவர்களால் சேதமாக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மோட்டார் சைக்கிள் ஒன்றின் உரிமையாளரைக் கைது செய்தமையுடன் அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் மேலும் இருவரைக் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். 3 மோட்டார் சைக்கிள்களும் சான்றுப்பொருள்களாக நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டன.

சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டமையுடன், மேலும் மூவர் தேடப்பட்டு வருகின்றனர் எனப் பொலிஸார் மன்றுக்கு அறிவித்தனர்.

வழக்கை விசாரித்த யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம், சந்தேகநபர்கள் மூவரையும் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ)

## பகிடிவதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களில் 2 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் முதுநிலை மாணவர்களால் வழங்கப்படும் பகிடிவதை துன்புறுத்தல்களால் படிப்பைக் கைவிட்டு வெளியேறியிருக்கின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளில் 2 ஆயிரம் மாணவர்கள் பகிடிவதை காரணமாக பல்கலைகழக படிப்பைக் கைவிட்டு வெளியேறியுள்ளனர் எனப் பொலிஸ் ஆணைக்குழு எமக்குத் தகவல் வழங்கியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழகங்களுக்கு நுழையும் அவர்கள் பகிடிவதை காரணமாக உடல், உளரீதியாகப் பாதிக்கப்பட்டு வெளியேறியுள்ளனர். சிலர் தமது உயிரைத் துறந்துள்ளனர். மேலும் பலர் உயிருக்கு ஆபத்தான நிலைக்குச் சென்றுள்ளனர்.

சிலர் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு செல்கிறார்கள். மற்றவர்கள் வாழ்க்கையில் தங்கள் வழியை இழக்கிறார்கள்.

எனவே பகிடிவதையால் பாதிக்கப்பட்டு பல்கலைக்கழக கல்வியை இழந்தவர்களின் தகவல்களைச் சேகரிக்க ஆணைக்குழு ஒன்றை அரசு அமைக்கவுள்ளது.

அந்த ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைய பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வியைத் தொடர அனுமதி வழங்கப்படும் – என்றார். (ஐ)

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

# இராஜதந்திர நெருக்குவாரம்

“யானை வரும் பின்னே; மணி ஓசை வரும் முன்னே!” என்பார்கள்.

இலங்கையின் இராஜதந்திர விடயங்களிலும் அப்படியான முன்னிலை சமிக்ஞைகள் வருகின்றன என்றே தோன்றுகின்றது.

ஏறத்தாழ ஒரே சமயத்தில் ஆறு முக்கிய நாடுகளின் இராஜதந்திரிகள் கொழும்பு வந்து, இராஜதந்திரப் பேச்சுக்களில் ஈடுபட்ட பின்னர் நாடு திரும்பியிருக்கின்றனர்.

இந்த வார முற்பகுதி கொழும்பில் இராஜதந்திர நகர்வுகளின் உச்சக் கட்டம் கட்டவிழ்ந்த பருவ நிலைக் காலமாகக் கடந்திருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்ஸிலில் நிரந்தர உறுப்புரிமை கொண்ட – வீட்டோ வலிமை மிக்க – ஐந்து நாடுகளில் நான்கு நாடுகளின் பிரதிநிதிகள் கொழும்பில் தனித்தனியாக இலங்கை அரசுத் தரப்புடன் பேச்சு நடத்தியிருக்கின்றார்கள்.

அமெரிக்கா, பிரிட்டன், சீனா, ரஷ்ய ஆகிய நான்கு வல்லாதிக்க நாடுகளின் பிரதிநிதிகளும் ஜப்பான் மற்றும் இந்தியாவின் விசேட தூதுவர்களும் கொழும்பில் முகாமிட்டு இராஜதந்திரக் காய் நகர்த்தங்களின் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

* அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கு உரிய உதவிச் செயலாளர் அலிஸ் வெல்ஸ் மூவர் அடங்கிய தனது உயர் மட்டக் குழுவோடு கொழும்பு வந்தார்.

* ரஷ்யாவின் வெளிவிகார அமைச்சர் சேர்ஜி லவ்ரொவ் 42 பேர் அடங்கிய ‘ஜம்போ’ குழுவுடன் கொழும்பு வந்து திரும்பியுள்ளார்.

* சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ, 16 பேர் கொண்ட தனது குழுவுடன் ஒரு நாள் ‘விசிற்’ அடித்துத் திரும்பியுள்ளார்.

* பிரிட்டிஷ் பிரதமரின் விசேட பிரதிநிதி கரித் பெய்லியும் சத்தம் சந்தடியின்றி இதே காலத்தில் கொழும்பு வந்து திரும்பியுள்ளார். ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தொடர்பான விடயங்களில் அதிக ஈடுபாடு காட்டியிருக்கின்றார் இவர்.

* ஜப்பானிய இராஜங்க அமைச்சர் ஜொஸோ யமமோட்டாவும் இதேசமயம் இலங்கை வந்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியிருக்கின்றார்.

* மேற்படி ஐவரையும் தவிர மற்றொருவரின் இலங்கை விஜயம் சத்தம் சந்தடி ஏதுமின்றி இரகசியமாக நடந்தேறியிருக்கின்றது. இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் ராம் யாதவின் வருகைதான் அது. கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து கொழும்பு வந்து, புதிய அரசின் ஓரிரு மிக முக்கிய தலைவர்களை மட்டும் சந்தித்து விட்டு, வந்த வேகத்திலேயே அவர் பாரதம் திரும்பி விட்டார் என்று தகவல். பிரதமர் மோடியின் விசேட செய்தி ஒன்றை இலங்கைத் தலைவர்களுக்கு அவர் கையளித்தார் என்று ஒரு பேச்சடிபடுகின்றது.

– இவ்வாறு உலகின் ஆறு மிக முக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் இராஜதந்திர நகர்வுகளுக்காக ஒரே சமயத்தில் இலங்கை வந்திருக்கின்றமை இலங்கைக்குப் பெருமைக்குரிய விடயமன்று.

எத்தகைய இராஜதந்திர நெருக்கடிக்குள் – பன்முனைப் புச் சிக்கலுக்குள் – அது மாட்டிக் கொண்டுள்ளது என்பதன் வெளிப்பாடாகத்தான் இது நோக்கப்படவேண்டியதாக உள்ளது.

அடுத்த மதம் ஜெனீவாவில் ஆரம்பமாகி அதற்கு அடுத்த மாதம் – மார்ச் மாதம் – மூன்றாம் வாரத்தில் சூடு பிடிக்கப் போகும் இலங்கை விவகாரத்துக்குக் கட்டியம் கூறும் ஏற்பாடாகவே இந்த ஆறு தரப்புகளினதும் ஏக நேர இலங்கை விஜயத்தை நோக்க வேண்டியுள்ளது.

மார்ச் மூன்றாம் வாரத்தில் ஜெனீவாவில் சூழப் போகின்ற சர்வதேச இராஜதந்திரச் சிக்கல் என்ற யானையின் வருகைக்கு முந்திய எச்சரிக்கை மணி ஓசையாகத்தான் இந்த ஆறு நாட்டுப் பிரதிநிதிகளின் இலங்கை வருகையை நோக்க வேண்டியுள்ளது.

தான் முன்னர் எடுத்த முடிவிலிருந்து விலகி – தான் சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறி – சர்வதேசக் கடப்பாட்டையும், பொறுப்பையும் துச்சமென மதித்துத் தூக்கி எறிந்து – ஜெனீவாவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கவுன்ஸிலில் விட்டேத்தியாக நடக்க உத்தேசித்திருக்கும் இலங்கைக்கு, அத்தகைய போக்கினால் விளையக்கூடிய விளைவுகளுக்கு – விபரீதங்களுக்கு – முன்னெச்சரிக்கை மணி அடிக்கும், அபாயச் சங்கு ஊதும் நடவடிக்கையாகவே இந்த ஆறு பிரதான நாடுகளின் கவனமும் ஒரே சமயத்தில் இலங்கை மீது திரும்பிய விடயத்தை அவதானிக்க வேண்டியுள்ளது.

இது கொழும்புக்கு புரிந்தால் சரி. புரியுமா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...!

# கிளிநொச்சியில் நேற்று வெடிபொருள்கள் மீட்பு!





கிளிநொச்சி, ஜன. 17

கிளிநொச்சி, கிருஷ்ணபுரம் பகுதியில் வெடிக்காத நிலையில் வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் காணி உரிமையாளர், கனரக வாகனத்தைக் கொண்டு தனது காணியைத் துப்பரவு செய்துகொண்டிருந்த போது இவ்வாறு வெடிபொருள்களை அவதானித்துள்ளார்.

இது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்த காணி உரிமையாளர், அதனைப் பாதுகாப்பாக அகற்றுமாறு கோரியுள்ளார்.

இது குறித்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார், கிளிநொச்சி நீதிமன்றின் அனுமதியுடன் விசேட அதிரடிப்படையினரின் உதவியோடு அதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## சஜித்தின் அலுவலகத்தில் தைப்பொங்கல் நிகழ்வு






எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் அலுவலகத்தில் நேற்று முன் தினம் தைப்பொங்கல் விழா நடைபெற்றது.

இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் சிறுபான்மையினப் பங்காளிக் கட்சிகளின் பிரமுகர்களும், ஐ.தே.கவின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

அரசு இம்முறை தேசிய பொங்கல் விழாவை இரத்துச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இராணுவத்தினரின் தைப்பொங்கல் நிகழ்வு!







முல்லைத்தீவு, ஜன. 17

முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் நிகழ்வுகள் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய முன்றிலில் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெயந்த செனவிரத்னவின் தலைமையில் இந்தப் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்தோடு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் சிறப்பு பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு இந்த ஆண்டு சாந்தியும் சமாதானமும் நிறைந்த ஆண்டாக அமைய வேண்டும் மற்றும் ஆஸ்திரேலியாவின் காட்டுத்தீயால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து விரைவில் அந்த நாடு முன்னேறவேண்டும் எனவும் முல்லைத்தீவு பாதுகாப்பு படை தலைமையகத்தில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் சிறப்பு பூசைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகள், 64 ஆவது படைப்பிரிவின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் கீர்த்தி கொஸ்தா உள்ளிட்ட ஏனைய படை அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் பாதுகாப்பு படையினரால் மக்களுக்கு பொங்கல் சிற்றுண்டிகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. (ஐ)

**நாளை** 18.01.2020 – சனிக்கிழமை

நட்சத்திரம்: சுவாதி பி.இ 3.37 வரை
திதி : அட்டமி மு.ப 9.20 வரை

இராகுகாலம் : 9.35 – 11.05
சுப நேரம் : 3.35 – 5.05

# சஹ்ரானின் 2 சகாக்கள் டுபாயில் கைதாகினர்!

கொழும்பு, ஜன. 17

இலங்கையில் ஈஸ்டர் தினத்தன்று இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிமின் சகாக்கள் இருவர் டுபாயில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டுபாய் சென்று இந்தச் சந்தேகநபர்களைக் கைது செய்துள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சிறப்புக் குழு அவர்களை இலங்கைக்கு அழைத்து வந்து சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஈஸ்டர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை அடுத்து நாட்டிலிருந்து தப்பியோடினர் எனக் கூறப்படும் இருவரே இவ்வாறு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அவர்களை 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாவலப்பிட்டி – ஹப்புகஸ்தலாவை பகுதியைச் சேர்ந்த 30 வயதான மொஹமட் சலீம் அப்துல் சலாம், அம்பாந்தோட்டையைச் சேர்ந்த 37 வயதான மொஹம்மட் சஹ்ரான் மொஹம்மட் றியாஸ் அகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இரு சந்தேகநபர்களிடமும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தொடர்ச்சியாக விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது. (ஐ)

# வவுனியா பிரதேச செயலராக கமலதாசன் பதவியேற்றார்



வவுனியா, ஜன. 17

வவுனியா பிரதேச செயலாளராக வவுனியா மாவட்ட செயலகத்தின் உதவி அரச அதிபராக கடமையாற்றிய ந.கமலதாசன் நியமிக்கப்பட்டார்.

புதிய பிரதேச செயலரான ந.கமலதாசன் நேற்றுக் காலை 9.15 மணியளவில் தனது கடமையைப் பொறுப்பேற்றார்.

இந்த வைபவத்தில் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், மாவட்ட செயலக ஊழியர்கள், பிரதேச செயலக ஊழியர்கள், கிராம சேவையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ – 100)

# வவுனியா பாடசாலைகளில் நேற்றுக் கால்கோள் விழா



தரம் 1 இற்கு மாணவர்களை அனுமதிக்கும் கால்கோள் விழா வவுனியா பாடசாலைகளில் சிறப்பாக இடம்பெற்றது.

தேசிய ரீதியில் தரம் 1 இற்கு மாணவர்களை உள்வாங்கும் தேசிய வேலைத்திட்டம் நேற்று நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் கால்கோள் விழா அதிபர் இ.நவரட்ணம் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

குடியிருப்பு பிள்ளையார் ஆலய முன்றலிருந்து பிரதம, சிறப்பு விருந்தினர்கள், புதிய மாணவர்கள் பாண்ட் வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டதுடன் பாடசாலையின் தரம் 2 மாணவர்கள் புதிய மாணவர்களுக்கு மாலை அணிவித்து கிரீடம் சூட்டி கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

அத்துடன் நடனம், பாடல் முதலிய நிகழ்வுகளும் தரம் 1 மாணவர்களை மகிழ்விக்கும் வகையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.அமிர்தலிங்கம் கலந்துகொண்டமையுடன் சிறப்பு விருந்தினர்களாக பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எம்.தினேஷ், பழைய மாணவர் சங்கச் செயலாளர் ப.கார்த்திக் மற்றும் விருந்தினர்களாகப் பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ – 100)

# மின் தடை

யாழ்ப்பாணம், ஜன.17

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

சங்கானை, பண்டத்தரிப்பு, விழிசிட்டி, தொல்புரம், சுழிபுரம், கள்ளவேம்படி, வடலியடைப்பு, சில்லாலை, சாந்தை, விளான், பெரியவிளான், இளவாலை, மாரீசன்கூடல், சேந்தாங்குளம், மாதகல், காஞ்சிபுரம், ஜம்புகோலபட்டிணம், குசுமாந்துறை, காட்டுபுலம் ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

ஆனந்தபுரத்திலிருந்து முருகண்டி வரை, இரனை மடுச்சந்தி, அறிவியல் நகர், ஆனந்தபுரம் NAITA, கிளிநொச்சி வைத்தியசாலை, ஸ்ரீலங்கா ரெலிக் கொம், விக்ரமரட்ண பிறைவேட் லிமிட்டட், Ware House Complex, மத்திய வங்கி, Mas Active யுனிச் செலா, பொறியியல்பீடம், விவசாயபீடம், கார்கில்ஸ், Argo இராணுவ பாசறை ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

அவுசதப்பிட்டிய கிராமத்திலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

சிலாவத்துறை, அரிப்பு, முள்ளிக்குளம், சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், பெரியதம்பனையிலருந்து மடு வரைக்கும், மடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# கிளிநொச்சியில் விபத்து; நேற்று ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி, ஜன. 17

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் அருகில் ஏ – 9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளை லொறி மோதியுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



விபத்தை ஏற்படுத்திய லொறி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதோடு வாகனத்தைச் செலுத்திய சாரதி கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# கடுகதி ரயில் தடம் புரண்டு விபத்து ஒடிசாவில் 40 பயணிகள் படுகாயம்



மும்பையில் இருந்து புவனேசுவரம் சென்று கொண்டிருந்த 'லோகமானிய திலக் சூப்பர் ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ்' ரயில், ஒடிசா மாநிலம் கட்டாக் அருகே தடம் புரண்டதில் நாற்பதுக்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்தனர்.

இவர்களில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுகிறது.

நேற்றுக் காலை 7 மணி அளவில் கட்டாக் அருகே சாலாகோவன் மற்றும் நேர்கண்டி ரயில் நிலையங்களுக்கு இடையே ரயில் வந்த போது அதன் 8 பெட்டிகள் தடம் புரண்டன.

அடர்ந்த மூடுபனி காரணமாக சிக்னல் மாறி வந்த ரயில், சரக்கு ரயில் ஒன்றின் காட்டு பெட்டியில் மோதியதால் விபத்து ஏற்பட்டதாக முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்தில் 5 பெட்டிகள் தண்டவாளத்தில் இருந்து முழுமையாக விலகிக் கவிழ்ந்தன.




3 பெட்டிகள் தண்டவாளத்தில் இருந்து தடம் புரண்ட நிலையில் நின்றன. காயமடைந்த பயணிகள் கட்டாக் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# ரூபாய் நோட்டில் லட்சுமியின் படம் அச்சிட்டால் பணமதிப்பு உயருமாம்

## சுப்பிரமணியன் சுவாமியின் கண்டுபிடிப்பு இது!

போபால்,ஜன. 17

இந்திய ரூபாய் நோட்டுகளில் இந்து கடவுளான லட்சுமியின் படம் அச்சிடப்பட்டால் பண மதிப்பு உயரும் என்று, பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி கருத்து தெரிவித்துள்ளார்.

அமெரிக்க – ஈரான் போர் பதற்றம் காரணமாக சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. இதன் தாக்கத்தால் அமெரிக்க டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பும் சரிந்துள்ளது.

இந்நிலையில், மத்திய பிரதேசத்தின் காண்ட்வா மாவட்டத்தில் 'சுவாமி விவேகானந்த வ்யக்யன்மாலா' என்ற சொற்பொழிவுத் தொடரில் உரையாற்றிய சுப்பிரமணியன் சுவாமி இவ்விடயம் குறித்து அங்கு கூறியவை வருமாறு:–

இந்தோனேசிய நாட்டுக் கரன்ஸியில், விநாயகர் படம் அச்சிடப்பட்டுள்ளது. விநாயகர் தடைகளை நீக்குபவர். இதைக் கருத்தில் கொண்டு, இந்திய ரூபாய் நோட்டிகளில் லட்சுமியின் படம் அச்சிடத் நான் ஆதரவு தெரிவிக்கிறேன். இதுகுறித்துப் பிரதமர் மோடி பதிலளிக்க வேண்டும்.

குடியுரிமை திருத்தம் சட்டத்தில் ஆட்சேபனைக்குரியது எதுவுமில்லை.காங்கிரஸினரும் மகாத்மா காந்தியும் இதையே (சி.ஏ.ஏ) கோரினர். மன்மோகன் சிங் 2003 இல் நாடாளுமன்றத்திலும் இதனை நிறைவேற்ற வேண்டும் என்று கோரினார். நாங்கள் அதைச் செய்தோம். பாகிஸ்தானின் முஸ்லிம்களுக்கு நாங்கள் அநீதி இழைத்தோம் என்று இப்போது அவர்கள் அதை ஏற்கவில்லை. என்ன அநீதி இழைக்கப்பட்டது? பாகிஸ்தானின் முஸ்லிம்கள் வர விரும்பவில்லை, நாங்கள் அவர்களை கட்டாயப்படுத்த முடியாது. – என கூறினார்.



# விண்வெளிக்குச் செல்லும் இந்தியாவின் வீரர்களுக்கு ரஷ்யாவில் விசேட பயிற்சி!


இந்தியாவின் ககன்யான் திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் இந்த மாதத்தில் பயிற்சிக்காக ரஷ்யா அனுப்பப்படுவார்கள் என இந்திய விண்வெளி அமைப்பான இஸ்ரோ தெரிவித்துள்ளது.

விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் இஸ்ரோவின் திட்டத்திற்கு ககன்யான் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக 4 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என இஸ்ரோ தெரிவித்திருந்தாலும், பாதுகாப்பு காரணங்களுக்காக அவர்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் விண்வெளிப் பயணத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 4 பேருக்கும் ரஷ்யாவில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதற்காக இம்மாதத்தில் ரஷ்யா செல்லும் அவர்களுக்கு 11 மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

2022 ஆம் ஆண்டு செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள ககன்யான் திட்டத்திற்கு மத்திய அரசு 10 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# புதுச்சேரியில் பா.ஜ.கவின் தலைவராக சாமிநாதன்



புதுச்சேரி,ஜன.17

பாரதீய ஜனதாக் கட்சியின் புதுச்சேரி தலைவராக சாமிநாதன் மீண்டும் தேர்வானார்.

மத்திய அமைச்சர் பிரகலாத் தலைமையில் புதுச்சேரி மாநில பா.ஜ.க. தலைவர் தேர்தல் நடைபெற்றது. இதில் பாஜக தலைவராக சாமிநாதன் மீண்டும் தேர்வானார். சாமிநாதன் 2015 ஆம் ஆண்டு முதல் புதுச்சேரி பா.ஜ.க. தலைவராக இருந்து வருகிறார். மேலும் 3 ஆண்டுகள் பா.ஜ.க. தலைவராக செயல்பட உள்ள சாமிநாதன் நியமன எம்.எல்.ஏவாகவும் உள்ளார்.

# கடும் நடவடிக்கைக்கு கோருகிறது இந்தியா

பயங்கரவாதத்திற்கு ஆதரவு அளிக்கும் நாடுகள் மீது சர்வதேச அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ள இந்தியாவின் முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத், பயங்கரவாதத்தின் ஊற்றுக் கண் எங்கே இருக்கிறது என்று கண்டு பிடித்து அதை அழிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

டெல்லியில் வெளியுறவு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள ரெய்சினா டயலாக் என்ற வருடாந்திர கருத்தரங்கில் பேசிய அவர், இரட்டை கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு, பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா எடுப்பதை போன்ற கடுமையான நடவடிக்கைளை இந்தியாவும் பின்பற்ற வேண்டும் என கூறினார்.

# காஷ்மீர் பிரச்சினை; பாதுகாப்புச் சபையில் கிளப்பும் முயற்சியில் பாக். மீளத் தோல்வி!

சீனாவின் உதவியுடன் ஐ.நா. பாதுகாப்பு சபையில் காஷ்மீர் விவகாரத்தை எழுப்பும் பாகிஸ்தானின் முயற்சி மீண்டும் ஒருமுறை தோல்வியைத் தழுவியது என இந்தியத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த மாதத்தில், ஐ.நா.பாதுகாப்பு கவுன்ஸிலில் கூட்டத்தில் சீனா மூலம் காஷ்மீர் விவகாரத்தை எழுப்ப பாகிஸ்தான் முயற்சி செய்தது. 370ஆவது பிரிவு ரத்து செய்யப்பட்டது இந்தியாவின் உள்நாட்டு விவகாரம் என்றும், காஷ்மீர் பிரச்சனை இருதரப்பு பிரச்சினை என்பதால் சர்வதேச தலையீட்டுக்கு இடமில்லை என்றும் நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகியவை கைவிரித்துவிட்டன.



ஐ.நா.பாதுகாப்பு கவுன்ஸிலில் தலைமைப் பொறுப்பில் உள்ள பிரான்ஸும், இந்த நிலைப்பாட்டில் திட்ட வட்டமாக உள்ளது. இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் சீனா மீண்டும் காஷ்மீர் பிரச்சினையை எழுப்ப முயற்சி செய்தது.

ஆனால், ஏற்கெனவே எடுத்த நிலைப்பாட்டில் மாற்றமில்லை என, ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் இடம்பெற்றுள்ள பிற உறுப்பு நாடுகள் தெரிவித்து விட்டமையால் சீனாவுக்கும், பாகிஸ்தானுக்கும் ஏமாற்றமே மிஞ்சியது.

# 5 நாள்களில் ஐயாயிரம் ஒட்டகங்கள் ஆஸ்திரேலியாவில் சுட்டுக் கொலை!

## கடும் வறட்சியைச் சமாளிக்க இந்த நடவடிக்கையாம்

மெல்போர்ன்,ஜன.17

ஆஸ்திரேலியாவில் கடும் வறட்சி காரணமாக 5 நாள்களில் 5,000 ஒட்டகங்கள் சுட்டுக்கொல்லப் பட்டன.

ஆஸ்திரேலியாவின் சில பகுதிகளில், தற்போது வறண்டசூழ்நிலை காணப்படுகிறது. நாட்டின் வனப்பகுதி களில், தண்ணீர் இல்லாமல் போனதால், அடிக்கடி காட்டுத்தீ உருவாகி வருகிறது.

தெற்கு ஆஸ்திரேலியாவில் அதிகம் காணப்படும் ஃபெரல்வகை ஒட்டகங்கள், கடுமையான வறட்சி காலங்களில் தண்ணீரை அதிகம் குடிப்பதாகக் கூறி



சுமார் 10 ஆயிரம் ஒட்டகங்களைக் கொல்ல ஆஸ்தி ரேலியா அரசு முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகி இருந்தது. ஐந்து நாள்களில் ஒட்டகங்களைக் கொல்வதற்கு சிறப்புக் குழு வையும் ஆஸ்திரேலியா அரசு நியமித்துள்ளது.

இந்நிலையில், 5 நாள்களில் சுமார் 5,000 ஒட்டகங்களை ஹெலிக்கொப்டரில் பறந்த படி தாங்கள் சுட்டுக்கொன்றுள்ளனர் என அதி காரிகள் தெரிவித்துள்ளனர். இந்த நடவடிக் கைக்கு வன உயிரின ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்கா, சீனா இடையே முதற்கட்ட வர்த்த ஒப்பந்தம்



வொஷிங்டன்,ஜன.17

அமெரிக்கா – சீனா இடையிலான முதற்கட்ட வர்த்த ஒப்பந்தம் கையெ முத்தாகி உள்ளது.

உலகின் இருபெரும்பொருளாதார நாடுகளான அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே சுமார் 2 ஆண் டுகளாக வர்த்தக போர் நடந்து வந் தது. இந்த வர்த்தக போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் ஒப்பந் தம் ஏற்படுத்திக்கொள்ள இரு நாடுக ளும் ஒப்புக்கொண்டன.

இந்த நிலையில் அமெரிக்கா மற் றும் சீனா இடையிலான முதற்கட்ட ஒப்பந்தம் புதன்கிழமை கையெழுத் தானது. சீனாவின் உயர்மட்ட பிரதி நிதிகள் முன்னிலையில் இந்த ஒப் பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் – சீனப் பிரதமர் துணை லீயு ஹி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்த முதற்கட்ட ஒப்பந்தம், இரு பொருளாதார சக்திகளுக்கும் இடை யிலான பதற்றத்தை குறைக்கும் என்று நம்பப்படுகிறது. இந்த ஒப்பந் தத்தில் கையெழுத்திட்டபோது, தான் சீனாவுக்கு செல்லும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று டிரம்ப் கூறினார்.

# டிரம்புக்கு எதிரான தீர்மானம் 21இல் செனட்டுக்கு வருகிறது

## அரசியல் நெருக்கடியில் அவர்

வொஷிங்டன்,ஜன.17

டொனால்ட் டிரம்பை ஜனாதி பதி பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் செனட்டுக்கு அனுப்பப்பட்டது. அங்கு அவ ருக்கு எதிரான விசாரணை வருகிற 21ஆம் தேதி தொடங் கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் டொனால்ட் டிரம் புக்கு நெருக்கடி முற்றுகிறது எனக் கூறப்பட்டது.

ஜனநாயகக் கட்சியின் போட் டியாளரான ஜோ பிடனை விசா ரிக்க உக்ரைன் மீது அவர் அழுத்தம் கொடுத்து அதிகாரத் தைத் துஷ்பிரயோகம் செய் தார் என அமெரிக்க ஜனாதி பதி டிரம்ப் மீது குற்றம் சாட்டப்பட்டுள் ளது.



இதையடுத்து, டிரம்பை ஜனாதிபதி பதவி யிலிருந்து நீக்கக் கோரும் பிரேரணையை முன்மொழிந்த ஜனநாயகக் கட்சி, அமெ ரிக்க நாடாளுமன்ற மக்கள் பிரதிநிதிகள் அவையில் தாக்கல் செய்து நிறைவேற்றி யது.

ஜனாதிபதி டொனால்ட் டிரம்பிற்கு எதிரான இரண்டு குற்றச்சாட்டுகளை செனட்டுக்கு அனுப்பவும், அமெரிக்க வரலாற்றில் மூன் றாவது குற்றச்சாட்டு விசாரணைக்கு எடுக்க வும் வாக்கெடுப்பு இந்திய நேரப்படி நேற்று முந்தினம் இரவு நடைபெற்றது. இதில் தீர் மானத்தை செனட் அவைக்கு அனுப்ப மக் கள் பிரதிநிதிகள் அவை ஒப்புதல் அளித் தது. இதுதொடர்பான தீர்மானத்தில் அமெ ரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோச்சி கையெழுத்திட்டார்.

# பாகிஸ்தானில் கடும் பனிப்பொழிவு பலி எண்ணிக்கை 111 ஆக உயர்வு



இஸ்லாமாபாத்,ஜன.16

பாகிஸ்தானில் கடும் பனிப்பொழிவு காரண மாக ஏற்பட்ட பனிச்சரிவு மற்றும் நிலச்சரிவுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 111 ஆக உயர்ந்துள்ளது.

பாகிஸ்தான் நாட்டில் கடந்த ஒரு வாரமாக கடும் பனிப்பொழிவு நிலவிவருகிறது. பனிப் பொழிவு காரணமாக அம்மாகாணத்தின் பல் வேறு பகுதிகளில் ரெயில் மற்றும் சாலை போக்கு வரத்து சேவை முற்றிலும் பாதிக்கப்பட்டது.

பலுசிஸ்தானில் பனிப்பொழிவு, கனமழை யால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்ப டைந்தன. கடும் பனிப் பொழி வால் வீடுகள் மேற்பரப்பில் அதிகளவில் பனி இருந்த தால் பாரம் தாங்காமல் வீட்டின் கூரை இடிந்து விழுந்தும் கடும் பனிப்பொழிவில் சிக்கி யும் பெண்கள், குழந்தைகள் உள் ளிட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை தற்போது 111 ஆக உயர்ந்துள் ளது என அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

கடுமையான பனி பொழி வால் நீலம் பள்ளத்தாக்கில் 73 பேர் பலியாகியுள்ளனர். பலு சிஸ்தானின் 31பேரும், பஞ்சாப் மாவட்டத்தில் உள்ள சியால் கோட் உள்ளிட்ட பகுதிகளில் 7 பேர் என மொத்தம் 111 பேர் உயி ரிழந்துள்ளனர் எனப் பேரிடர் மீட்புப் பணி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் வடக்கே உள்ள மலைப்பகு திக்குச் செல்ல வேண்டாம் என பாகிஸ்தான் அரசு அறிவுறுத்தியுள்ளது. குறிப்பாக சுற்று லாப் பயணிகள் அங்கே செல்வதைத் தவிர்க்கு மாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# வாழ்நாள் அதிபராகிறார் புடின்?



வாழ்நாள் முழுதும் தாம் அதிபராக இருக்கும் வகையில் ரஷ்யாவின் அரசமைப்புச் சட்டத்தை திருத்த அதிபர் விளாடிமிர் புடின் திட்டமிட்டுள் ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

ரஷ்ய அரசமைப்பு விதி களின்படி ரஷ்யாவில் ஒருவர் 2 தடவைக்கு மேல் தொடர்ச் சியாக அதிபர் பதவியை வகிக்க முடியாது. இப்போது அதிபராக இருக்கும் புடினின் பதவிக் காலம் வரும் 2024 இல் முடி கிறது.

நேற்று அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், நாடாளு மன்றம், பிரதமர் பதவி, ஸ்டேட் கவுன்ஸில் ஆகி யவற்றின் அதிகாரங் களை விரிவுபடுத்த உள்ளார் எனக் கூறி யுள்ளார். இந்த ஸ்டேட் கவுன்ஸிலின் தலை வராக பொறுப்பேற்று அதை ரஷ்யாவின் உச்சபட்ச அதிகார மையமாக மாற்றுவதே புடினின் திட்டம் என்று கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக பிரதமர் திமித்ரி மெ ட்வதேவ் ராஜினாமா செய் துள்ளமையைச்சுட்டிக்காட்டி உள்ள ரஷ்ய அரசியல் விமர் சகர்கள், புடின் தேர்தல் வாயி லாக இந்த மாற்றங்களை அமல்படுத்தும் எண்ணத்தில் இருக்கிறார் எனத் தெரிவித் துள்ளனர். சீனா மற்றும் உஸ்பெகிஸ்தான் அதிபர்க ளின்வழிமுறையில், வாழ்நாள் அதிபராக புதினும் மாறுவார் என கூறப்படுகிறது.



வெள்ளிதோறும்

# சைவக்கதிர்

ஆக்கம் – ஈசான.சி.சக்திகிரீவன்

# கிரியாக்கிரமமான தீட்சை

உலகில் உள்ள சமயங்கள் அனைத்தும் அவரவர் சமய அனுஷ்டானங்களில் ஈடுபடுவதற்கு சமய பிரவேசம் செய்வதற்கான சடங்கொன்றினைக் கொண்டுள்ளன. அவ்வகையில் சைவர்களும் தாம் சைவன் என்று கூறிப் பெருமை கொள்வதற்கு சமய தீட்சை வழங்கப்பெற்று வருகிறது.

### சிவ தீட்சை

இந்த சரீரம் நமக்கு கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறுதலின் பொருட்டேயாம் என்பது ஆறுமுக நாவலர் வாக்கு. சைவ சமய மரபிலே பிறந்த எல்லோரும் ஏழு வயதிலாவது, ஒன்பது வயதிலாவது சமய தீட்சை என்னும் சிவ தீட்சையினை பெற்று அன்று தொடக்கம் அனுட்டானம் செய்து வருதல் வேண்டும்.

அனுட்டானம் செய்வதனால் தேகசுகம்,புனிதம்,தீர்க்காயுள்,சுறுசுறுப்பு, நோயின்மை, மகிழ்ச்சி முதலியன கிடைக்கின்றன. ஒவ்வொரு நாளும் அதிகாலை எழுந்து ஸ்நானம் செய்த பின் சுத்த ஜலம். விபூதி முதலியவற்றை கொண்டு அனுட்டானம் செய்து, பஞ்சாட்சர ஜெபம் செய்து,தேவார, திருவாசகங்களைப் பாராயணம் செய்தல் வேண்டும். அனுட்டானம் என்பது ஆசாரம், ஒழுக்கம் என பொருள்படுகிறது

நல்ல ஞானங்களை கொடுக்க கூடியதும் மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்பவற்றை நாசப்படுத்த கூடியதுமான ஒரு கிரியையே தீட்சை ஆகும். சைவ சமயத்தில் பிறந்தவர்கள் தீட்சையினைத் தவறாது பெற்று கொள்வது அவசியமாகும். இத்தீட்சையை பெற்றுக் கொண்டவர்கள் விதிப்படி வீபூதி, உருத்திராக்கம் அணிந்து கொண்டு, சந்தியாவந்தனத்தை செய்து கொண்டு, சிவாலய தரிசனம் செய்வதற்கு தகுதி பெறுகின்றார்கள். இதனை ஆண்,பெண் இருபாலரும் செய்தல் வேண்டும்.

### விசேட தீட்சை

சமய தீட்சை பெற்று சந்தியா வந்தனத்தை கிராமமாக செய்து வருபவர்கள் விசேஷித்த சம்ஸ்காரங்களோடு கூடிய தீட்சையைப் பெறுவதை விசேட தீட்சை என்பர். இத்தீட்சையை பெற்றவர் சிவாக்கினி,குரு பூஜை என்பவற்றை செய்யவும் சிவஞான சாஸ்திரங்களை கேட்கவும் மூன்றாம் தீட்சையான நிர்வாண தீட்சைப் பெறவும் தகுதி பெறுகிறார்கள்.



### நிர்வாண தீட்சை

மோக்ஷத்தில் பெருவிருப்பம் உடையவரும் போகத்தில் வெறுப்பு உள்ளவரும் மலபரிபாகத் தன்மையை அடைந்தவர்களும் சத்தினி பாதத்தை அடையும் தகுதியுடையோருமே நிர்வாண தீட்சையை பெறத் தகுதி பெறுகிறார்கள்.


சமய விசேட தீட்சைகளை பெற்று கொண்ட சிஷ்யர் குருவுடன் ஒருவருடம் இருந்து கொள்தல் வேண்டும்.குருவானவர் சிஷ்யரின் மலபரிபாகத் தன்மையையும் சத்திநிபாதத் தன்மையையும் அறிந்து அவரின் பக்குவத்தை கண்டு செய்வதே நிர்வாண தீட்சையாகும் பதி,பசு,பாச லட்ணத்தையும் சைவ நாற்பாதங்களான சரியை,கிரியை,யோகம்,ஞானம் என்பவற்றின் தன்மைகளையும் அறிந்தவனையே சிஷ்யனாக குரு ஏற்று கொள்ளுவார்.

தீட்சையானது ஏழு விதமானதாக அமைகிறது .

சிவபெருமானே குருவாக எழுந்தருளி இவ்வுயர் கைங்கரியம் நடத்தப்படுவதாக அமைகிறது.தீட்சையானது பௌதீகி, நைஷ்டிகி என இருவகைப்படும்.பௌதீகி தீட்சயினால் போக,மோட்ஷ பலன்கள் இரண்டையும் அடைய முடிகிறது. நைஷ்டிகி தீட்சையானது மோட் பலனை மட்டுமே தர வல்லது.

விஷம் தீண்டிய ஒருவரின் உடலில் உள்ள விஷ சக்தி மந்திர சக்தியினால் எவ்விதம் அகற்ற படுகிறதோ அதே போல ஆன்மாக்களுக்கு அநாதியாக உள்ள மல பந்தத்தை போக்கி சிவத்துவத்தை உண்டாக்கும் சிறப்பு நிர்வாண தீட்சைக்கு உண்டு.தீட்சையில் குறைவில்லாமலும் தீட்சை பெற்ற பின் ஆயுள் பரியந்தம் வரை சிவாக மங்களில் கூறிய படி அனுட்டிப்போர் ஷாட்குணகளை அடைவதோடு மோட்ஷத்தையும் அடைவது திண்ணமாகிறது.

நிர்வாண தீட்சை பெற்றவர் சந்தியாவந்தனம்,சூரிய பூஜை,சிவ பூஜை ஆகியவற்றை எதுவித குறையுமின்றி செய்வாராகில் இவர் சிவாசாரியார் ஆவதற்கான லட்ணத்தை பெற்று கொள்கிறார். இத்தகையவர்கள் ஆச்சாரிய அபிகேம் செய்ய



பெற்று சகல கிரியைகளையும் செய்வதற்கான அதிகாரம் வழங்கப்படுகிறது.

இத் தீட்சைகளும் ஆச்சாரிய அபிஷேகங்களும் அவரவர் ஆத்மீக மேம்பாடு கருதியே நடை பெற வேண்டும்.

சிவதீட்சை என்பது அக்கினி காரியத்துடன் கூடியதாக அமைவதே மகோன்னதமானதாகும் இவற்றுக்கு அங்கமாக நயன தீட்சை,பரிச தீட்சை,வாசக தீட்சை, மானச தீட்சை,சாஸ்திர தீட்சை,யோக தீட்சை என பலவாக உள்ளன.இவை அனைத்தும் அவரவர் தகுதிக்கேற்ப அவரவர் பக்குவம் கண்டு வழங்கப்படுவதாகிறது.

தீட்சையில் ஒரு பகுதி உபதேசம் ஆகிறது. இது மல தோங்களை நீக்கி அருட் பெருங்கடலை அளிப்பது. சிவமூல மந்திரமான பஞ்சாட்சரத்தை செபிக்கும் தகைமையை அளிக்கிறது. இத் திருவைந்தெழுத்தில் சிவ சிவ என்னும் இரண்டெழுத்துக்கள் மிக மேலானதாக போற்றப்படுகின்றன. இதனை திருமந்திரத்தில் திருமூலர் *சிவசிவ என்றிட தீவினை மாளும்* என்கிறார் மணிவாசகப் பெருமான் *யானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்* என்கிறார்.வாதவூரடிகள் புராணத்தில் பரமாசாரியாரிடம் சிவாயநம என்கின்ற உபதேசத்தை பெற்றது இங்கு கவனிக்கப் பாலது. இம் மந்திரமே மிகவும் உயர்ந்ததாகவும் போற்றப்படுகிறது. இம் மந்திரத்தை மூல மந்திரம், பிரசாத மந்திரம் என்று பலவாறு ஆகமங்கள் விதந்து கூறுகின்றன. *நமசிவாய* தூல பஞ்சாட்சரம், *சிவாயநம* சூக்கும பஞ்சாட்சரம் என்றும் போற்றப்படுகிறது. சிவன் உருவமாக இருக்கும் போது நமசிவாய என்றும், அருவமாக இருக்கும் போது சிவாயநம என்றும் இம் மந்திரங்களின் லயாந்த விரிவு ஈசானம் தற்புரும், அகோரம்,வாமதேவம்,சத்யோயாசாதம்,இருதயம், சிரசு, சிகா, கவசம், நேத்ரம்,அஸ்திரம் என விரிவு படுகிறது.சிவாகம கிரமமான ஆவாகனத்தில் பிரம்மதந்திரத்தில் லயாந்த பரமேஸ்வரராக இத்தகைய மந்திரங்ககள் மூலம் அவரை சிருஷ்டிக்க வேண்டும் என்பது ஆகம பிரமாணம். ஈசானம் முதல் அஸ்திரம் வரையான மந்திரங்கள் பஞ்சப் பிரம சடங்க மந்திரங்கள் என்று ஆகமங்கள் செப்புகின்றன. இது நமசிவாய ,சிவாயநம என்பவற்றின் விரிவுமாகிறது.இதுவே அனைத்து வேத சிவாகம சாஸ்திர தோத்திர நூல்களின் விரிவும் ஒடுக்கமும் ஆகிறது.இவ்வுண்மையை ஆதாரமாக வைத்தே கலைகளனைத்தும் நமசிவாய வடிவமாக எழுந்தருளியிருக்கும் சிதம்பர நடராஜரில் சூரிய உதயத்தில் விரிந்தும்,அர்த்த யாமத்தில் ஒடுங்கியும் கொள்கின்றன .

### குரு

குரு தீக்ஷா குரு,வித்யா குரு,சப்த குரு(சப்த குரு,அனந்த குரு,சதாசிவ குரு, ஸ்ரீகண்ட குரு,அம்பிகா குரு,ஸ்கந்த குரு,விஸ்ணு குரு,பிரம்ம குரு) எனப் பல குரு மூர்த்தங்கள் பூஜா காரியங்களில் பூசிக்கப்படுவது கவனிக்கப் பாலது.சிவ பிரானே இக் குரு மூர்த்தங்களில் எழுந்தருளிவருவது தெளிவு. தீக்ஷாகுரு,வித்தியா குரு மானிட வடிவம் தாங்கிவரினும் அவர்களை சிவனாகவே கண்டு வழிபடுதல் வேண்டும். அக இருளை நீக்கும் குருவினையே கொள்ள வேண்டும்.இவ் அக இருள் நீக்கா குருவினை கொள்ளின் பிறவிப்பெரும் கடலில் வீழ்ந்து தத்தளித்து அவலம் அடைய வேண்டி வரும். இக்குரு பற்றி கூறிய திருமூலர் –

**குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்**
**குருட்டினை நீக்கா குருவினைக் கொள்வர்,**
**குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்**
**குருடும் குருடும் குழிவிழுமாறே** – என்றார்.

இதன் பொருள் அறியாமையை அறிவினால் போக்கும் குருவினைக் கொள்ள மாட்டார்,அறியாமையை நீக்காத குருவினைக் கொள்வர். அது குருடனும் குருடனும் சேர்ந்து குருட்டுத் தனமாக ஆடி இரு குருடர்களும் அறியாமையால் குழியில் விழுவது போலாம். ஞானமில்லாத குரு ஞானத்தை உபதேசிப்பது ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்டுவது போலாம். இருவரும் கெடுவர் என்பதாகும்

சிலர் சில பூஜா காரியங்களை செய்கின்ற போது குரு உபதேசப்படி செய்கிறோம் என்கிறார்கள். அவ் உபதேசங்கள் வேத சிவாகமங்களுக்கு முரணாக இருக்கின்றன. இத்தகைய குருட்டினை நீக்கா குருவினுடைய உபதேசத்தை கேட்பதால் தீமையை வரவழைக்க வேண்டியதாகியும் விடுகிறது. உபதேசங்கள் எவையாகயிருப்பினும் வேத சிவாகமத்திற்கு மாறுபடாதிருப்பதே மிக மிக அவசியமாகிறது.

(இக் கட்டுரையானது கமலை ஞானப்பிரகாசதேசிக சுவாமிகள்,ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்,பழநி ஈசானசிவாசாரிய சுவாமிகள், தேவக்கோட்டை தற்புருதேசிகர், திருச்சிராப்பள்ளி பட்டுசுவாமி ஓதுவார்,அகோர சிவாசாரியார்(க்ரியாக்ரம ஜோதி) ஆகியோர் இயற்றிய நூல்களை ஆதாரமாகக் கொண்டது.)

# சஜித் தலைமையில் பொதுக் கூட்டணி!




கொழும்பு, ஜன. 17

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பொதுக் கூட்டணி அமைத்துப் பொதுத் தேர்தலில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கட்சியின் தலைமைத்துவம் தொடர்பாக மிகவும் காலங்கடத்தப்பட்டுள்ளது. பொதுத் தேர்தலும் நெருங்குகின்றமையால் மேலும் கலங்கடத்தப்பட்டு வருவதில் எம்மால் எந்தவித இலாபத்தையும் பெற்றுக்கொள்ள முடியாது. இதனால் தலைமைத்துவம் தொடர்பாக இறுதியான தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

தலைமைத்துவம் தொடர்பாக நீண்ட பேச்சுகள் கட்சிக்குள் இடம்பெற்று வருகின்றன. இதன்போது சபாநாயகர் கரு ஜயசூரியவின் பெயரும் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இவருக்குத் தலைமைத்துவம் வழங்குவது தொடர்பாக யாரும் இணக்கம் தெரிவிப்பதாக தெரியவில்லை. உண்மையிலே கடந்த 2015ஆம் ஆண்டே இவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்திருந்தால் இன்று எமது கட்சிக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

அன்றைய தினம் இவரின் பெருமையை அறிந்திராதவர்கள் இன்று அவரின் பெருமையை தெரிவித்து வருகின்றனர். ஆனால் பொதுத்தேர்தலில் பெரும்பான்மையை பெறுவதற்காக சஜித்தின் தலைமையில் போட்டியிட்டுவதே தற்போது சாதகமாக அமையும் என்று நாங்கள் கருதுகின்றோம்.

ஜனாதிபதி ஒரு கட்சியிலும், பிரதமர் வேறொரு கட்சியிலும் ஆட்சி நடத்தியதற்கான வரலாற்றுச் சான்றுகள் எம்மிடம் இருக்கின்றன. இதனை மீண்டும் ஏற்படுத்துவதால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

ஜனாதிபதி கோட்டாபயவும் இந்த மாற்றத்தை விரும்புவார் என்றே நாங்கள் கருதுகின்றோம். அவர்கள் கட்சிக்குள்ளும் அமைதியான முறையில் முரண்பாடுகள் இடம்பெற்று வருவதை நாங்கள் அறிவோம். இதனால் அவர் சஜித் போன்ற ஒரு நபரைப் பிரதமராகக் கொண்டு செயற்பட விரும்பலாம்.

பலமான பொதுக் கூட்டமைப்பை அமைத்துக் கொண்டு சஜித்தின் தலைமையில் செயற்பட்டால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெறமுடியும் என்று நாங்கள் கருதுகின்றோம்.

ஆனால் இதனை அவரால் மாத்திரம் நிறைவேற்ற முடியாது. கட்சியின் ஏனைய பலரும் அதற்கான ஒத்துழைப்பு பெற்றுக் கொடுக்க வேண்டும் – என்றார்.

## ரஜினிக்கு விசா வழங்க மறுத்த இலங்கை அரசு?



புதுடில்லி, ஜன. 17

நடிகர் ரஜினிகாந்த் இலங்கை வருவதற்கு கோட்டாபய ராஜபக்ஷ அரசும், விசா வழங்க மறுப்பு தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மையில் தமிழகத்துக்குச் சென்றிருந்த வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நடிகர் ரஜினிகாந்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பில் ரஜினியின் அரசியல் திட்டங்கள் குறித்து விக்னேஸ்வரன் கேட்டறிந்தார். மேலும் இந்தியாவில் நடக்கும் அரசியல் மாற்றங்கள், தமிழர்கள் பிரச்சினை, திரைப்பயணம் குறித்தும் பேசினார்கள்.

அதேபோல் இலங்கை வருமாறும், அங்கிருக்கும் தமிழ் மக்களைச் சந்திக்குமாறும் அரசியல் ரீதியான கூட்டங்களில் அங்கு கலந்து கொள்ளவேண்டும் என்றும் ரஜினிக்கு விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்தார் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில் தற்போது நடிகர் ரஜினிகாந்துக்கு விசா வழங்க இலங்கை அரசு மறுப்பு தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணத்திற்கு வருகை தர உள்ள நடிகர் ரஜினிகாந்துக்கு விசா வழங்க இயலாது, அவர் அரசியல் நடவடிக்கைகாக இலங்கை வருகிறார், அவர் மக்களை சந்திக்க வாய்ப்புள்ளது, அரசியல் திட்டங்களை செயல்படுத்த இலங்கை அரசு எப்போதும் விசா வழங்காது. இதனால் ரஜினிக்கும் விசா வழங்க முடியாது – என்று கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அமெ. தூதுவரின் பொங்கல் விழா








தமிழர்திருநாளானதைப்பொங்கலை, பொங்கல்வைத்துக்கொண்டாடியுள்ளார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ்.

இது தொடர்பில் தன்னுடைய டுவிட்டர் தளத்தில் புகைப் படங்களைப் பதிவிட்டிருக்கும் அவர், இலங்கையில் தைப்பொங்கலின் அறுவடை நாளைக் கொண்டாடும் அனை வருக்கும், மகிழ்ச்சியான இந்த நாளில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள் என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## சிசுவைக் காட்டில் வீசிய இளம் தம்பதி

திருமலை, ஜன. 17

திருகோணமலை – முள்ளிப்பொத்தானை, ஈச்சநகர் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை சிசுவின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிசுவின் பெற்றோர்கள் வீட்டில் வைத்து சிசுவைப் பிரசவித்த நிலையில் வீட்டின் பின்புறம் உள்ள காட்டுப் பகுதியில் பையொன்றினுள் கட்டி சிசுவை வீசி சென்றுள்ளனர் என ஆரம்ப கட்ட விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

20 வயதுடைய கணவன், 17 வயதுடைய மனைவி ஆகியோரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதோடு, மனைவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிசுவின் தாய் இரத்தப்போக்கு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், இது தொடர்பில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்து வைத்தியசாலை நிர்வாகத்தினர் தம்பலகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதன்போது பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் காட்டுப் பகுதியிலிருந்து சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சிசுவின் சடலம் சட்ட நடவடிக்கைக்காக கந்தளாய் நீதிமன்ற நீதவான் தலைமையில் சட்ட வைத்திய அதிகாரியின் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கந்தளாய் தடயவியல் பொலிஸார் மற்றும் தம்பலகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை அரசு மறுப்பு

தென்னிந்திய நடிகர் சுப்பர் ஸ்டார் ரஜினி காந்த்துக்கு விசா வழங்க மறுப்பு தெரிவிக்கப்பட்டதாக வெளியான செய்தியை இலங்கை அரசு மறுத்துள்ளது.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை இலங்கை வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

எனினும், அரசியல் ரீதியான பயணங்களுக்கு அவருக்கு அனுமதி வழங்கப் போவதில்லை என இலங்கை அரசு கூறியதாகத் தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த விடயம் தொடர்பாகக் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் இதனை மறுத்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடகப்பேச்சாளர், 'ரஜினிகாந்துக்கு விசா மறுக்கப்பட்டதாகக் கூறப்படும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை.

அத்துடன் இந்தியாவின் சென்னை மற்றும் புதுடில்லி ஆகிய இரு தூதரகங்களிலும் இந்த விடயம் குறித்து நாம் விசாரித்தோம். அவ்வாறான எவ்வித சம்பவங்களும் இடம்பெறவில்லை என்பது இதன்போது உறுதி செய்யப்பட்டது. சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்திடமிருந்து எமது தூதரகங்களுக்கு எவ்வித விசா கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை.

ரஜினிகாந்துக்கு விசா வழங்க மட்டோம் என இலங்கை வெளிவிவகார அமைச்சு எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவில்லை' எனக் குறிப்பிட்டார். (ஐ)

northern PC PARK

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction,
Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

காலைக்கதிர் Kalaikathir



# 2019ஆம் ஆண்டில் உத்வேகத்துடன் ஆடிய வீரர் விராட் கோஹ்லி!




'2019ஆம் ஆண்டில் ஸ்பிரிட் ஒப் கிரிக்கெட், (spirit of cricket)ஆக விராட் கோஹ்லி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டின் சிறந்த வீரர்களுக்கு என்னென்ன விருதுகள் என ஐ.சி.சி. பட்டியல் வெளியிட்டுள்ளது.

அதன்படி 2019ஆம் ஆண்டில் உத்வேகத்துடன் ஆடிய வீரருக்கான விருது விராட்கோஹ்லிக்கு வழங்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ணத்தில் ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித்தை ரசிகர்கள் உற்சாகப்படுத்துங்கள் என சைகை செய்ததற்காக இந்த விருது வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பந்தை சேதப்படுத்திய புகாரில் ஓராண்டு தடை பெற்று களம் திரும்பிய ஸ்டிவ் ஸ்மீத்தை ரசிகர்கள் அவமதித்தபோது கோஹ்லி அந்த சைகையை செய்திருந்தார்.

மேலும், உலகின் தலை சிறந்த வீரராக பென் ஸ்டோக்ஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

உலகின் சிறந்த ஒருநாள் போட்டி வீரராக ரோகித் சர்மாவும், ஆஸ்திரேலியா வேகப்பந்து வீச்சாளர் பேட் கம்மின்ஸ் 2019ஆம் ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட் அணி வீரராகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

2019ஆம் ஆண்டின் சிறந்த ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகளின் கேப்டனான இந்தியாவின் விராட்கோஹ்லி தேர்வாகியுள்ளார்.

2019ஆம் ஆண்டின் ஒருநாள் போட்டி அணியில் கோஹ்லி, ரோகித் சர்மா, ஷமி, குல்தீப் ஆகிய 4 இந்திய வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

அதேபோல் டெஸ்ட் போட்டி அணியில் கோஹ்லி மயங் அகர்வால் ஆகிய இந்திய வீரர்கள் இடம் பெற்றுளனர்.

## கோஹ்லியின் தீவிர ரசிகர் மைதானத்தில் செய்த செயல்

இந்திய வீரர் விராட் கோஹ்லி உலகம் முழுவதும் ஏராளமான ரசிகர்களைக் கொண்டுள்ளார் என்பது அனைவரும் அறிந்ததே.

கடந்த செவ்வாயன்று ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியின்போது, விராட் கோஹ்லியின் ரசிகர் சிராக் கிலாரே தனது தனித்துவமான சிகை அலங்காரம் மூலம் அனைவரது கவனத்தையும் ஈர்த்தார்.

அவரது தலையின் பின்புறத்தில் இந்தியா அணித் தலைவர் கோஹ்லியின் முகம் போன்று சிகை அலங்காரம் செய்திருந்தார். சிராக் கிலாரே தனது தனித்துவமான சிகை அலங்கார படத்தை டுவிட்டரிலும் பதிவிட்டார்.

பல ஆண்டுகளாக, நான் இந்தியாவின் ஒவ்வொரு போட்டிகளிலும் விராட்டைப் பின்தொடர்கிறேன், அவர் 19 வயதுக்குட்பட்ட அணியின் தலைவராக ஆனதிலிருந்து அவருக்கு ரசிகராக இருந்து வருகிறேன் என்று சிராக் கிலாரே கூறினார்.

மேலும், இந்த சிகை அலங்காரம் செய்ய ஆறு முதல் எட்டு மணிநேரம் ஆனது, எதிர்வரும் ஒவ்வொரு போட்டியையும் இதே பாணியில் பார்க்கத் தயாராகி வருவதாகவும் கிலாரே கூறினார்.

கோஹ்லியை சந்திக்க இன்னும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அவரை சந்திப்பதே எனது கனவு, அவரை சந்திக்கும் போது முதலில் நான் அவரது கால்களைத் தொட்டு அவரைக் கட்டிப்பிடித்து அந்த தருணத்தை புகைப்படம் எடுத்து வைத்துக்கொள்வேன் என்று கிலாரே கூறினார்.



## விலகினார் ரிஷப் பந்த்



முதல் ஒருநாள் போட்டியின் போது பந்து ஹெல்மெட்டில் தாக்கியதால் காயமடைந்த ரிஷப் பந்த், 2ஆவது ஒருநாள் போட்டியில் பங்கேற்கமாட்டார் என இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணியானது மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் கடந்த செவ்வாய் மும்பையில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில், 6வது துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய ரிஷப் பந்ட், 33 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்தார். அப்போது பேட் கம்மின்ஸ் வீசிய பந்து ரிஷப் பந்த் தலையில் பலமாகத் தாக்கியது.

இதில் காயமடைந்த அவர் போட்டியின் பாதியிலேயே வெளியேறினார். அவருக்குப் பதிலாக கே.எல்.ராகுல் கீப்பிங் செய்தார்.

இரண்டாவது ஒருநாள் போட்டி ராஜ்கோட் மைதானத்தில் இன்று நடைபெற உள்ளது. இதற்கான இந்திய அணி ராஜ்கோட் சென்றுள்ளது. ஆனால் மூளையில் ஏற்பட்ட அதிர்வு காரணமாக அவர் இரண்டாவது போட்டியில் பங்கேற்க மாட்டார் என இந்திய கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

## மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அதிர்ச்சி கொடுத்த அயர்லாந்து!

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான முதலாவது ரி – 20 போட்டியில், அயர்லாந்து அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரில், 1 – 0 என்ற கணக்கில் அயர்லாந்து அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

கிரெனடா மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.




இதன்படி முதலில் களமிறங்கிய அயர்லாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 208 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, போல் ஸ்டயர்லிங் 95 ஓட்டங்களையும், கெவீன ஒ பிரையன் 48 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், செல்டோன் கொட்ரெல், கெர்ரி பியர் மற்றும் டுவைன் பிராவோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஹெய்டன் வோல்ஷ் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 209 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்பு 204 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் அயர்லாந்து அணி 4 ஓட்டங்களால் வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, எவீன் லீவிஸ் 53 ஓட்டங்களையும், சிம்ரொன் ஹெட்மியர் 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அயர்லாந்து அணியின் பந்துவீச்சில், ஜோசுவா லிட்டில் 3 விக்கெட்டுகளையும், கிரைஜ் யங் 2 விக்கெட்டுகளையும், சிமி சிங் மற்றும் ஜோர்ஜ் டொக்ரெல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 47 பந்துகளில் 8 சிக்ஸர்கள் 6 பவுண்ரிகள் அடங்களாக 95 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட போல் ஸ்டயர்லிங் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்று போட்டிகள் ரி – 20 தொடரின் இரண்டாவது போட்டி, நாளை சென் கிட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# தமிழரை ஆபத்துவேளை கைவிட்ட சர்வதேசம் அரசியல் தீர்வை ஒருபோதும் கொண்டுவராது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 17

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை இலங்கைக்குள்ளேயே பெற்றுக் கொள்ள வேண்டும். வெளிநாடுகள் வந்து எமக்கான தீர்வுகளைப் பெற்றுத் தரமுடியாது. அழிவு யுத்தம் நடைபெற்றபோது எமது மக்கள் தம்மை விட்டு சர்வதேச சமூகம் வெளியேறக் கூடாது என்று காலில் விழுந்து அழுதபோதும் அதைக் கண்டுகொள்ளாமல் எமது மக்களை அழிவுகளுக்குள் கைவிட்டுச் சென்ற சர்வதேசம் எமது மக்களுக்கு தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு ஒருபோதும் வரப் போவதில்லை என்று கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற தமிழ் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சர்வதேசத்தில் தீர்வு இருப்பதாக போலித் தமிழ் தேசியம் பேசும் சுயநலவாதிகள் தற்போது பழைய மாவையே அரைத்துக் கொண்டிருக்கின்றனர்.

அழுதும் பிள்ளையை அவளே பெறவேண்டும் என்பதுபோல் தமிழ் மக்களின் அரசியல் உரிமை பிரச்சினைகளுக்கும் அபிவிருத்தி பிரச்சினைகளுக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு நாமே நடைமுறைச் சாத்தியமான வழியில் முயற்சிக்க வேண்டும்.

இன ஐக்கியம், தேசிய நல்லிணக்கத்தின் ஊடாகவே தேசிய அரசியல் பிரச்சினைக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் காண வேண்டும். அவ்வாறில்லாமல் சர்வதேச சமூகத்திடம் தீர்வு இருப்பதாகவும் கூறி தொடர்ந்தும் தமிழ் மக்களை தவறான பாதையில் இழுத்துச் சென்று – மேலும் பிரச்சினைகளுக்குள் தள்ளிவிடுவதற்கும் – இருக்கின்ற பிரச்சினைகளை தீராப் பிரச்சினைகளாக வைத்திருப்பதற்குமே சுயநல அரசியல் தலைமைகள் முயற்சிக்கின்றனர் – என்றார். (ஐ)



# குடும்ப ஆட்சி மீள ஆரம்பம்

## பிமல் ரத்னாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 17

நாட்டின் முக்கிய அரச பதவிகளில் ராஜபக்ஷ குடும்பத்தினரே நியமிக்கப் பட்டதன் ஊடாக மீண்டும் ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சி தொடர்கிறதென நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டுகருத்துத்ஷதெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய அரசுஎதிர்க்கட்சியாக இருந்தபோது மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பாகப் பரவலாகக் கருத்துக்களை வெளியிட்டு வந்தது.

ஆனால்தற்போது ஆட்சிபூடம் ஏறியவுடன் மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரத்தில் பின் வாங்குகின்றது.

அதாவது மத்திய வங்கி பிணை முறி விவகாரம் தொடர்பான கணக்காய்வு அறிக்கை தேவையற்றது என்று கூறுவதன் ஊடாக மஹிந்த அணியினரும் தொடர்புபட்டிருக்கின்றனர் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எனவேதான் மத்திய வங்கி பிணை முறி மோசடி பற்றிய கணக்காய்வு அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென நாம் வலியுறுத்தினோம்.

அத்துடன் நாட்டின் சில முக்கிய அரச சேவைகளில் ராஜபக்ஷ குடும்பத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனூடாக ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சி மீண்டும் தொடர்கின்றது – என்றார்.

# மீண்டும் சர்ச்சையில் ஷாபி!

கொழும்பு, ஜன. 17

குருநாகல் போதனா வைத்திய சாலையின் பிரசவ மற்றும் மகப்பேற்று வைத்தியராகக் கடமையாற்றிய ஷாபி சிஹாப்தீனுக்கு எதிரான வழக்கில் பயங்கரவாதி சஹ்ரானின் பெயரால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் வைத்தியர் ஷாபிக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது கருத்தடை விவகாரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் எனக் கூறப்படும் தாய் மார்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சாணக, சந்தேகநபரான ஷாபி,லாபிர்எனும்சந்தேகநபருடன்தோன்றும் ஒளிப்படத்துடன் கூடிய இறுவெட்டொன்று சி.ஐ.டி.யிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அந்த லாபிர் எனும் நபர் பயங்கரவாதி சஹ்ரானுடன் சத்தியப்பிரமாணம் செய்தவர். அது குறித்து எந்த விசாரணையும் இல்லை. அந்த பின்னணியில் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஷாபி விடயத்தில் நீக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இதற்கு வைத்தியர் ஷாபியின் சட்டத்தரணிகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். ஜனாதிபதி சட்டத்தரணி நவரட்ன பண்டார இது கருத்தடை விவகாரம் குறித்த தாய்மார்களின் வழக்கு. பாதிக்கப்பட்டோர் தாய்மாரா? சஹ்ரானா? எனக் கேள்வி எழுப்பினார்.

கடும் தொனியில் ஒரே நேரத்தில் இந்தக் கருத்துக்கள் பரிமாறப்பட்ட நிலையில், நீதிமன்றில் பெரும் சர்ச்சை மற்றும் பரபரப்பு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ். வருகிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 17

வடக்கு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை கள் குறித்து ஆராய்வதற்குஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ இம் மாதம் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியாளர்சந்திப்பின்போது இராஜாங்க அமைச்சர் மஹிந்தாணந்த அளுத்த கமகேஇதனை தெரிவித்தார்.

வடக்கு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கு தீர்வு வழங்குவது அரசின் நோக்கமாகும். தோட்டப்புற மக்கள் மற்றும் வடக்கு மாகாண மக்களைப் பொருளாதாரரீதியில்பலப்படுத்துவது அரசின் இலக்கு என்றும் அவர் கூறினார். (ஐ)

# ரஞ்சனின் குரல் பதிவுகளை ஆராய 10 பொலிஸ் குழுக்கள்

கொழும்பு, ஜன. 17

முன்னாள் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் 100,000 இற்கும் மேற்பட்ட தொலைபேசி உரையாடல் பதிவுகளை ஆய்வு செய்ய பொலிஸ் அத்தியட்சகர் தர அதிகாரிகள் தலைமையில் பத்து பொலிஸ் குழுக்கள் நியமிக்கப் பட்டுள்ளன.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வழிநடத்தலில் இந்த விசாரணைக் குழுக்கள் செயற்படும்.

மேல் மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்கள், சிறப்பு குழுக்களில் உள்ள பொலிஸார் மேற்கு மாகாணத்தில் உள்ள காவல் நிலையங்கள் மற்றும் சிறப்புப் பிரிவுகளின் பொலிஸ் அதிகாரிகள் விசாரணைக்கு நியமிக்கப் பட்டுள்ளனர்.

தொலைபேசி உரையாடல் பதிவுகள் அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அதன் பதிவுகளைப் பொலிஸார் தனித்தனியாகப் பகுப்பாய்வு செய்து வருகிறார்கள்.

இந்தப் பிரிவிற்கு, கணினிகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், குற்றப் புலனாய்வுத் துறையின் உதவி கோரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)




# கிளிநொச்சி குடிதண்ணீர்த் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தின் குடிதண்ணீர்த் திட்டமானது மேலும் விரிவுப்படுத்தப்பட்டு விடுபட்ட கிராமங்கள் உள்வாங்கப்பட்டு விரைவுப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட ஒருங்ணைப்புக் குழுவின் தலைவர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த வாரம் கொழும்பில் நீர் வழங்கல், வசதிகள் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையில் அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற உயர் மட்ட கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் செருக்கன் குடியிருப்பு, காஞ்சிபுரம், வடக்கச்சியில் அழகாபுரி, பத்து வீட்டுத்திட்டம், புதுக்காடு, கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் காந்தி கிராமம் போன்ற பிரதேசங்கள் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளன. மக்களுக்கான சுத்தமான குடிதண்ணீர் மற்றும் வறட்சியான காலத்தில் சீரான குடிதண்ணீர் விநியோகம் என்பவற்றை கருத்தில் கொண்டு பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான பணிப்புரையை அமைச்சர் வாசுதேவ நாணக்கார அதிகாரிகளுக்கு விடுத்துள்ளார்.

அத்தோடு குடிதண்ணீருக்காக நீரைச் சுத்திகரித்து பெற்றுக்கொள்ளும் நிலையத்தின் தற்போதைய கொள்ளளவு போதுமானதாக இல்லாமையினால் அதனை மேலும் விரிவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இனி வரும் நாள்களில் நாளொன்றுக்கு அதிகளவான சுத்திகரிக்கப்பட்ட நீரை பெற்றுக்கொள்ள முடியும் – என்றார். (ஐ)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

சசிகா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
DS NO - 882

தலைமைக் காரியாலயம்,
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012

காரைநகர்
021 225 2454,
070 510 2484

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.



30 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.01.2020இல் வெளியிடப்பெற்றது.